In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 157/2021 | Prosecution witness P.W.14

Name: Prakash | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02-12-2024.

**(Accused 1 to 6 are present.**

முதல் விசாரணை :-

நான் ராமநாதபுரத்தில் வசிக்கிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். 2019 ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் நானும், பாரவேலும் காலை சுமார் 11 மணிக்கு கோபால்பட்டிக்கு போய்க்கொண்டு இருந்தோம். போலீசார் பின்னால் ஜீப்பில் வந்து இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த எங்களை நிறுத்தி விசாரித்தார்கள். அப்போது நாங்கள் கோபால்பட்டி போவதாகச் சொன்னோம். கொலைக்கேஸ் சம்மந்தமாக தெரியுமா என கேட்டார்கள். நாங்கள் தெரியாது என்று சொன்னோம். பின்னர் எங்களை மாமரத்துப்பட்டியில் உள்ள முருகேசன் என்பவரது தோட்டத்திற்கு பக்கத்தில் கூட்டிச் சென்றார்கள். அங்கு போய்விட்டு ஒரு நபரை போலீசார் விசாரித்தார்கள். அவர் பெயர் சரியாக தெரியவில்லை. ஆஜர் எதிரிகளில் 3 வதாக நிற்கும் எதிரியை காட்டி அவரைத்தான் போலீசார் விசாரித்ததாக சாட்சி கூறுகிறார். அப்போது அந்த நபர் மாணிக்கக்கல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாகவும், சிவக்குமார் என்பவரை கொலை செய்து விட்டதாகவும் சொன்னார். அதை எழுதிக்கொண்டு என்னிடமும், பாரவேல் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 3 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். முதல் சாட்சியாக பாரவேல் என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என்னுடன் கையெழுத்து செய்த பாரவேல் என்னுடைய நண்பர். ராமநாதபுரத்திலிருந்து கோபால்பட்டி போவதற்கு மாமரத்துப்பட்டி வழியாக செல்லவேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். குறிப்பிட்டு ஆய்வாளர் ஜீப்பில் எந்த இடத்தில் நின்றிருந்தார் என்றால் நிற்கவில்லை. எங்கள் பின்னால் ஜீப்பில் வந்து கொண்டிருந்தார். மாமரத்துப்பட்டி ஊரில் வைத்து எங்களிடம் முதலில் ஆய்வாளர் பேசினார் என்றால் சரிதான். குரும்பபட்டியில் இருந்து மாமரத்துப்பட்டி செல்லும் ரோட்டில் 500 மீட்டர் தொலைவில் அந்நபரை போலீசார் விசாரித்தனர். தார் ரோட்டில் 3 வது எதிரி நின்றிருந்தார் என்றால் சரிதான். குரும்பபட்டியிலிருந்து மாமரத்துப்பட்டி சுமார் 2.கி.மீ. தொலைவில் இருக்கும். எதிரி தவிர்த்து அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை. ஆய்வாளருடன் டிரைவர் அல்லாமல் போலீசார் 4 பேர் வந்தார்கள். அவர்கள் மின்னனு சாதனங்கள் எதையும் அவர்கள் எடுத்து வரவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் வைத்து போட்டேன். நான் சொல்வதுபோல் 500 மீட்டர் தொலைவில் தார் ரோட்டில் எதிரி நின்றிருக்கவில்லை என்றும் எங்கள் முன்பு வைத்து ஆய்வாளர் 3 வது எதிரியை பார்க்கவும் இல்லை என்றும் அவர் எங்கள் முன்னிலையில் எந்த விவரம் சொல்லவும் இல்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது போலீசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.02 17:35:53 +0530

Principal District Judge,
Dindigul.